1996 பிப்ரவரி 15]

வினா எண் 12, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

12--

வில்லியனூரில் ஆரம்பப் பள்ளி அமைத்தல்

38078*--திரு. ப. கலியபெருமாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவையாறு தொகுதியில் விளாங்குடி ஊராட்சியில் ஒரு பகுதியான வில்லியனூர் கிராமத்தில் ஆரம்பப்பள்ளி அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவையாறு தொகுதி, விளாங்குடி ஊராட்சியில் வில்லியனூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி திறக்க அரசு ஆணை எண். 708, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், நாள் 6 செப்டம்பர் 1995-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள விளாங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வில்லியனூர் கிராமத்தில் இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து அந்தப் பகுதி மக்கள் அங்கு ஒரு ஆரம்பப் பள்ளி வேண்டுமென்று விண்ணப்பம் போட்டு, அந்த விண்ணப்பம் ஏற்கப்படாமல் இருந்த நிலையில், இன்று நாட்டு மக்கள் நலம் கருதி மக்களுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி வரும் அம்மா ஆட்சியில் ஆணை பிறப்பித்து, அமைச்சரின் முயற்சியால் அந்த வில்லியனூரில் ஆரம்பப் பள்ளி தொடங்கப்பட்டு அந்தத் தொடக்க விழாவிலே நானும் கலந்து கொண்டு, அதன் பிறகு உடனடியாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டித் தருவதற்கு ஆணை பிறப்பித்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் அதற்காக முயற்சி செய்த அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், அந்த வில்லியனூர் மக்கள் சார்பாகவும் நன்றி கூறிக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.